ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


| வேணு : 6 | ஏப்ரல் 2001 | கானம் : 9 |
|---|---|---|


### விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 65 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 47 | 6 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 35 | 9 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை - 41 | 15 |
| 7. | ஸ்ரீ ப்ருந்தாவன தர்சனம் | 16a |
| 8. | தவம் | 17 |
| 9. | ஸ்ரீ குருவாயூரப்பன் - 4 | 20 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 68 | 22 |
| 11. | மஹாபாரத கதைகள் - நளோபாக்யானம் - தொடர்ச்சி | 27 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : கரஹரப்ரியா தாளம் : ஆதி

*பல்லவி*

***குழலோசை செய்கின்றான் முரளீதரன் -***
***யமுனா தீரத்தில் (குழலோசை)***

*அனுபல்லவி*

***வண்ண மயிலிறகை தலையில் தரித்து***
***வனிதையர் உள்ளம் கொள்ளை கொள்ளவே (குழலோசை)***

*சரணங்கள்*

***ராதே ராதே ராதே என்று கூவ***
***ரவியும் மதியும் தனை மறந்து நிற்க (குழலோசை)***

***மாலைப்பொழுதில் வீசும் தென்றலில்***
***மதியினை இழந்து அனைவரும் மயங்கவே(குழலோசை)***

***நந்தவனத்தில் அழகிய குடிலில்***
***நந்தகுமாரன் ஆனந்தமாகவே (குழலோசை)***

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

திருவண்ணாமலையில் யோகி ராம்சுரத்குமார் என்ற மஹாத்மா எல்லோருக்கும் அருள் பாலித்து வந்தார். அவர் பிப்ரவரி மாதம் 20-ஆம் தேதி அன்று அதிகாலையில் சுமார் 3.19 மணி அளவில் சித்தி அடைந்தார். 1952-ஆம் வருடம் தன்னுடைய குருவால் உபதேசிக்கப்பட்ட ''ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்'' என்ற மந்திரத்தையே அனவ்ரதமும் ஜபம் செய்து ஏகநாமத்தினாலேயே சித்தி அடைந்தவர்.

அக்காலத்தில், ஸமர்த்த ராமதாஸர், கபீர்தாஸர், நாமதேவர், ஜனாபாய் போன்ற அநேக பக்தர்கள் எப்படி அனவ்ரதமும் ஹரி நாமத்தை ஜபம் செய்து நாமமயமாகவே ஆகி வாழ்ந்தார்களோ, அப்படியே வாழ்ந்தவர் இவர். இவர் தன்னை அண்டியவர்கள் அனைவரது துயரங்களையும், நாம ப்ரபாவத்தினாலேயே தீர்த்து வைத்துள்ளார். தன் வாழ்க்கை முழுவதும் கருணையின் ரூபமாகவும் தன்னை அண்டியவர்களை ரக்ஷிப்பதை விரதமாகக்கொண்டும் வாழ்ந்தவர்.

அவருடைய ஆஸ்ரமத்தில் நம் ஸ்வாமிகள் மார்ச் மாதம் 2-ஆம் தேதி அன்று நம் பாடசாலை குழந்தைகளுடனும், ஸத்ஸங்கத்தின் அன்பர்களுடனும் சென்று இருந்தார்கள். அங்கு பகவான் யோகிராம்சுரத்குமாரின் பக்தர்கள் அனைவரும், பகவானுடன் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எல்லாம் தழுதழுத்த குரலுடன் பேசினார்கள்.

நம் ஸ்வாமிகள் குருக்ருபையைப் பற்றியும், குருவின் அவஸ்யத்தைப் பற்றியும், சபரிமோக்ஷம் பற்றியும் மிகவும் உருக்கமாக உபன்யாசம் செய்தார்கள். மாலையில் ஆஸ்ரமத்தில் கோபூஜையும், பகவானுடைய ஸமாதிக்கு ஆரத்தியும் நடைபெற்றது. பிறகு நம் ஸ்வாமிகள் நம் ஸத்ஸங்கத்து அன்பர்களுடன் கூடி ஏக நாமகீர்த்தனம் செய்தார்கள்.

பிறகு பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களை விட்டுப் பிரியாமல், சுமார் 12 வருட காலம் அவருடைய அருகாமையில் இருந்து, கைங்கர்யம் செய்து வந்த மா தேவகி அம்மையாருடன், சிறிது நேரம் அளவளாவி விட்டு, நம் ஸ்வாமிகள் சென்னை திரும்பினார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---



ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶதக்ரது பூர்த்தி நாள் அன்று (24-3-2001) நடைபெற்ற வித்வத் ஸதஸ்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : நான் ஜப தியானங்களில் ஈடுபடுவதால் எளிமையாக இருக்க வேண்டும் என்பதால் நான் எந்தவிதமான அணிகலன்களும் அணிவதில்லை. வெறும் துளஸி மணி மாலை மட்டுமே அணிந்து வருகின்றேன். இதைச் சிலர் தவறு என்கின்றார்களே!*

பதில் : பெண்களுக்கு அணிகலன்கள் என்பது ஆடம்பரத்திற்காக அல்ல. அவைகள் எல்லாம் மங்கள திரவியங்கள். ஒரு பெண்ணிற்கு ஸௌமங்கல்யத்தை அளிப்பவை. அவற்றை அணிவது தவறு இல்லை. அவைகளை அளவோடு அணிந்துகொள்வது ஸாதனையை எந்த விதத்திலும் பாதிக்காது.

*கேள்வி : பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணர் அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் எல்லாம் சரி என்று கூறுகின்றாரே! இது எப்படி சரியாக இருக்க முடியும்?*

பதில் : அத்வைதத்தை அடையும் மார்க்கத்தில் விசிஷ்டாத்வைதம், த்வைதம் எல்லாம் சரிதான் என்பதைத்தான் அவர் அப்படி சொல்லியுள்ளார்.

*கேள்வி : சாளக்ராமத்தில் இருந்து ஸ்வாமியின் ஸ்வரூபம் ஆவிர்பவித்து உள்ளதாக ஒருவர் கூறுகின்றார். இது ஸாத்யமா?*

பதில் : இது ஸாத்யம்தான். நானும் கேள்விப்பட்டுள்ளேன். நேரிலும் பார்த்துள்ளேன்.

*கேள்வி : மஹான்கள் பலரும், கடைசி காலத்தில் பல இன்னல்களுக்கு, குறிப்பாக உடல் உபாதைகளுக்கு ஆளாவதற்குக் காரணம் என்ன?*

பதில் : பல பக்தர்கள் அவர்களை அண்டி வருவதால், அவர்கள் அனைவரின் பாவங்களையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதாலேயே, அவர்கள் இத்தகைய துன்பங்களுக்கு ஆளாக நேரிடுகின்றது.

# வேத கதைகள் - 47

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## உபதேசத்தின் உண்மை

அருணர் என்ற பெயருள்ள முனிவருக்கு அத்யம்ஹர் என்ற பிள்ளை இருந்தார். அம்ஹ: என்றால் பாபம் என்று பொருள். அத்யம்ஹர் என்றால் பாபங்களை கடந்தவர் என்று பொருள். அவர் ஒரு ஸமயம், தன் சீடனான ஒரு ப்ரஹ்மசாரிக்கு சில விஷயங்களைக கூறி மற்றொரு முனிவர் அருகில் அனுப்பினார். ''ஓ ப்ரஹ்மசாரியே! த்யாம்பாதர் என்ற முனிவரின் பிள்ளை ப்லக்ஷன் என்ற பெயருள்ளவர். நீ அவரை அடைந்து ஸாவித்ர சரித ஸம்மந்தமான விஷயங்களை நீர் அறிந்தவரா, அறியாதவரா என்று அவரை கேள்'' என்றார்.

அந்த ப்ரஹ்மசாரி ப்லக்ஷரை அடைந்து, தன் ஆசாரியரின் உத்தரவை அவரிடம் தெரிவித்து அந்த கேள்வியை கேட்டான். நான் இதை அறிகிறேன் என்று ப்லக்ஷரும் பதில் கூறினார். அப்பொழுது ப்ரஹ்மசாரி ஓ, முனிவரே! நீர் அந்த ஸாவித்ராக்னியை அறிவீராகில் அந்த ஸாவித்ராக்னி எங்கு நிலை பெற்று இருக்கிறது என்று கேட்டார். அதற்கு ப்லக்ஷர், பரோரஜஸ் என்ற தத்வத்தில் ஸாவித்ரியக்னியானது நிலை பெற்றுள்ளது என்று பதில் அளித்தார்.

பரோரஜஸ் என்ற சொல்லிற்கு விளக்கம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. ரஜோ குணத்தோடு கூடின பிறப்பு, இறப்பு இவைகளின் தொடர்ச்சியான பிறவிப்பெருங்கடலுக்கு அப்பால் எவர் இருக்கிறாரோ அவருக்குத்தான் பரோரஜ: என்று பெயர். அந்த தத்வத்தில் ஸாவித்ரியாக்னியானது நிலைபெற்று இருக்கிறது. அந்த பரோரஜஸ் என்பவர் நம்மால் காணப்படும் சூரியமண்டலம் தான் என்று விளக்கினார். இந்த மாம்ஸ கண்ணால் பார்க்கப்படுகிற சூரிய மண்டலமானது ஸம்ஸாரத்தின் நடுவில் இருப்பதால் இவர் அர்வாக்ரஜா: என்றுதான் அழைக்கப்பட வேண்டும். ஆதலால் சூரிய மண்டலத்தினை பரோரஜ: என்று அழைக்க முடியாது. அதனால் நீர் கூறிய பதில் சரியானதாக ஆகாது என்று ப்ரஹ்மசாரியானவர்

முனிவரைப் பார்த்து, தகுந்த பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டார்.

அதற்கு முக்காலும் எது உண்மையோ அதுதான் பரோரஜஸ் எனப்படும். அதில் இந்த ஸாவித்ரியாக்னி நிலைபெற்று இருக்கிறது என்று அவர் பதில் அளித்தார். அந்த உண்மையான பரம்பொருளை அடைவதற்கு தவம் தான் கல்வியாகும். அதற்கு ப்ரஹ்மசாரி, அந்த தவமானது பலத்தில் நிலை பெற்றுள்ளது. உடல் பலம் இருந்தால்தான் தவம் புரியமுடியும். ஆதலால் தவத்திற்கு பலம் ஸாதனமாகும். பலத்திற்கு காரணம் ப்ராணன். இவ்விதம் கேள்வி பதில் வரிசையில் ஸாவித்ரம் என்ற அக்னி நிலைபெறுவதற்கு ஸத்யமான பொருள்தான் காரணமாகும்.

அந்த பரம்பொருள், ப்ராணன் என்ற தேவதா உருவமாக உடலில் நிலைபெற்றுள்ளது. இவ்விதம்தான் த்யானம் செய்ய வேண்டும் என்ற முடிவு ஏற்படுகிறது. ப்ராணனுக்கு மேற்பட்ட பொருள் எது என்று வினா எழுப்பக்கூடாது என்று என் ஆசிரியர் கூறி இருக்கிறார். இவ்விதம் ப்ரஹ்மசாரி ப்லக்ஷரிடம் தெரிவித்தார்.

அதற்கு ப்லக்ஷர் பதில் கூறுகிறார். உன் ஆசாரியன் உனக்கு நன்மையை கூறி இருக்கிறார். ஆதலால் ப்ராணனுக்கு மேற்பட்டவன் யார் என்று வினா எழுப்பினால் உன் தலை வெடித்துவிடும். மேலும் உன் ஆசாரியன் இந்த ஸாவித்ரியாக்னி விஷயத்தில் உன்னை என்னிடம் அனுப்பியதால் உன் ஆசாரியரினைக் காட்டிலும் நான்தான் உயர்ந்தவன் ஆகிறேன்.

இந்த ஸாவித்ரியாக்னி உபாஸனத்தின் பலத்தை கூறுவதற்காக காடகத்தில் மற்றொரு உபாக்யானம் கூறப்பட்டுள்ளது. விதேக தேசத்தின் அரசன் ஜனகன் ஸாவித்ரியாக்னியின் பயனை அடைய விருப்பமுள்ளவனாக, அஹோராத்ரங்களில்கூட அபிமானி தேவர்களோடு கூட சேர்ந்தான். எவன் ஒருவன் அஹோராத்ர தேவர்களை ஸாவித்ராக்னியாக உபாஸிக்கிறானோ அந்த மனிதன் பாபங்களிலிருந்து விடுபட்டு அபம்ருத்யு விலகியதால் நீண்ட ஆயுளை அடைகிறான். ஸ்வர்க்கத்தையும் அடைகிறான். இவன் எங்கும் குறைவற்ற அனைத்தையும் அடைகிறான். அஹினன் என்ற அச்வத்தரின் பிள்ளை இந்த ஸாவித்ராக்னியை தன் ஸ்வரூபமாக

த்யானம் செய்தான். அவன் தேஹத்தின் முடிவில் தன்வ மயமான அன்னபக்ஷியாகி ஸ்வர்கத்தை அடைந்து ஆதித்ய ஸாயுஜ்யத்தை அடைந்தான்.

ஸ்ரௌத கர்மாவை அனுஷ்டிப்பதில் திறமை உள்ள தேவபாகர் என்ற முனிவர் த்யானத்தால் ஸாவித்ராக்னியை நேரில் கண்டார். அப்பொழுது அசரீரியான ஒரு சொல் ஏற்பட்டது. இந்த தேவபாகர் ஸர்வஜ்ஞர் என்று அசரீரி கூறியது. அப்பொழுது இக்குரலை எழுப்பியவர் யார்? என்று தேவபாகர் கேட்டார். உடனே ஸாவித்ரியாக்னியான நான்தான் இவ்விதம் உன் பெருமையை கூறினேன். எல்லா தேவர்களும் என்னிடமே நிலைபெற்று உள்ளனர். எல்லா வேதாந்தங்களிலும் ப்ரகாசமான ஒளியை தாங்குகிறேன் என்று பதில் ஏற்பட்டது. இவ்விதம் கூறியவுடன் அந்த தேவபாகர் தன்னுடைய வஸ்த்ரத்தால் யஜ்ஞோபவீதம் செய்து நமோ நம: என்று கூறிக்கொண்டு பூமியை தண்டம் போல் வீழ்ந்து வணங்கினர். அப்பொழுது அவருடைய பக்தியால் மகிழ்ச்சியடைந்த அந்த தேவர், தேவபாகருக்கு அனுக்ரஹம் செய்தார். ஓ, தேவபாகரே! பயம் வேண்டாம். உன்னால் விரும்பிய பயன் ஏற்பட்டுவிட்டது. உனக்கு வெற்றிதான் என்று அனுக்ரஹம் செய்தார்.

இந்த கதைகளால் வித்வான்கள் பொறாமையினால் கலகம் செய்யக்கூடாது. ஆசாரியன் உபதேசித்த வழியாகவே நாம் த்யானம் செய்யவேண்டும். இந்த நியாயம் எல்லா உபதேசங்களுக்கும் பொதுவானது. வித்யா கர்வமுள்ள ஒரு மனிதன் மற்றொரு வித்வானோடு பொறாமையால் கலகம் செய்தால் இவனுடைய செல்வமானது பொறாமை இல்லாதவனை போய் அடைகிறது. பலம், தவம், ப்ராணன் இந்த யாவும் பொறாமை உள்ளவனை விட்டு ஸாவித்ராக்னியை உபாசிப்பவனை அடைகிறது. ஆதலால் உபாஸனை செய்பவனோடு விவாதம் செய்யக்கூடாது. ஆசாரியன் உபதேசம் செய்தது சரியா, தவறா என்ற எண்ணமும் கூடாது. ஆசாரியன் எவ்விதம் உபதேசம் செய்தாரோ அவ்விதமே செய்யவேண்டும். ஆசாரியன் உபதேசத்தின்படி தெய்வங்களை வழிபட்டால் அந்த தெய்வம் நேரில் வந்து அனுக்ரஹம் புரியும் என்ற பலவிதமான உண்மைகள் நமக்கு புலப்படுகின்றன.

# எந்தரோ மஹானுபாவுலு - 35

கயா யாத்திரை முடிந்து திரும்பிய ப்ரபுவின் ஸ்திதி விசித்திரமாக இருந்தது. உண்ணும்பொழுதும், தெருவில் நடக்கும் பொழுதும், படுத்துக்கொண்டு இருக்கும்பொழுதும், திடீர் திடீர் என்று அழுது அலற்றி, ''ஹா க்ருஷ்ணா! ஹா க்ருஷ்ணா!'' என பாடிக்கொண்டே நர்த்தனம் ஆட ஆரம்பித்துவிடுவார். இரவு முழுவதும் உறக்கம் என்பதே கிடையாது. எந்தக் காரியமும் சரிவர செய்ய இயலாத நிலையில் இருந்தார்.

பாடசாலைக்குச் செல்வார். வகுப்பில் மாணவர்களிடம், ''இந்த உலகில் எல்லா ப்ராணிகளுக்கும் ஒரே **ஆச்ரயம்** ஸ்ரீக்ருஷ்ணன் தான். எல்லாவற்றிலும் ஸாரமானது ஸ்ரீ க்ருஷ்ண நாமம்தான். இந்த வறட்டு ஶாஸ்த்ர ஞானத்தில் என்ன உள்ளது'' என்றே திரும்ப திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார். எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதில், ''க்ருஷ்ண நாமஸங்கீர்த்தனம் செய்யவேண்டும்'' என்பதாகவே இருந்தது.

ஆசார்ய கங்காதாஸ் நிமாயியிடம் வந்து, ''நீங்கள் கற்றறிந்த பண்டிதரல்லவா? வித்வானாகவும் மேதாவியாகவும் உள்ள தாங்கள் இப்படி மூர்க்கனைப் போல குதித்துப் பாடுவது, தன்னை அடக்கிக் கொள்ளாமல் நடந்துகொள்வது, இதெல்லாம் அழகாக இல்லையே! நீங்கள் பழையபடி உங்களை நம்பி படிக்க வந்துள்ள மாணவர்களுக்கு அத்யாபகராக இருக்கவேண்டும்'' என்று அறிவுரைத்தார். நிமாயி பணிவுடன் இதற்கு இசைந்தார். ஆனால் மறுநாளே வகுப்பில் தன்னை மறந்தார். ஸ்ரீ க்ருஷ்ண கீர்த்தனம்தான் அனைத்திலும் சிறந்தது. ஜீவன்களுக்கு இதைத்தவிர வேறு வழியே கிடையாது. ஶாந்திக்கும் ஆனந்தத்திற்கும் க்ருஷ்ண நாமம்தான் உபாயம் என திரும்ப திரும்பக் கூறினார். மாணவர்களுக்கும், இதைக்கேட்டு க்ருஷ்ண ப்ரேமை உண்டாகி, அவர்களும் பக்தி பரவசமாயினர்.

சிறிது நேரம் கழித்து, ப்ரபுவே தனது மாணவர்களிடம், இனி என்னால் உங்களுக்கு பாடம் சொல்லித்தர முடியாது. நீங்கள் வேறு அத்யாபகரை நாடுங்கள் என நா தழுதழுத்து சொன்னார். மாணவர்களும், ''உங்களை விட்டால் எங்களுக்கு வேறு கதி ஏது?'' என்று கதறினர். ப்ரபு, ''நான் என் செய்வேன். என் கண்முன் எந்நேரமும் ஶ்யாம வர்ண குட்டி கோபாலன் இனிமையாக குழலூதி என்னை மயக்குகிறானே! அதைக் கேட்டு நான் என் வசமிழந்து விடுகிறேன். நான் இனி பழைய மாதிரி பாடம் சொல்ல முடியாது'' என்று கதறினார். பிறகு அவர் தனது வித்யார்த்திகளிடம், நீங்கள் எல்லோரும் இத்துனை நாள் என்னுடன் சேர்ந்து இருந்தீர்கள். ஒரு தரம் நீங்கள் என்னுடன் க்ருஷ்ண கீர்த்தனம் செய்யுங்களேன். அது மிகவும் சுலபமானது என்று கூறி ப்ரபுவே தனது மதுரமான குரலில் இசையுடன்,

*ஹரே ஹரயே நம: க்ருஷ்ண யாதவாய நம: ।*
*கோபால கோவிந்த ராம ஶ்ரீமதுசூதன ॥*

என்று கைத்தாளம் போட்டுக்கொண்டு நாமஸங்கீர்த்தனம் பாட ஆரம்பித்தார். இப்படித்தான் முதன்முதலாக தனது நாம ஸங்கீர்த்தனத்தை பாடசாலையிலிருந்து ஆரம்பித்தார். தன்னை மறந்து அனைவரும் ஆடிப்பாடினர். சிறிது நேரத்திற்குப் பிறகு **பா**வாவேசம் கலைந்ததும் ப்ரபு மௌனமானார். மாணவர்களும் மௌனமாகினர். ப்ரபு அனைவரையும் ஆலிங்கனம் செய்து கொண்டார். எல்லோரும் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர்விட்டனர்.

ப்ரபுவின் புதிய மாறுதலைக்கண்டு நவத்வீபத்தில் விதவிதமாக பேசலானார்கள். சிலர் வாயு ரோகமென்றனர். சிலர் ப்ரபுவின் பக்தியை ஶ்லாகித்தனர். சிலர் விதவிதமான வைத்யங்களைக் கூறினர். ஶ்ரீவாஸ் பண்டிதர் மட்டும், ''நிமாயிக்கா வாயுரோகம்! சொல்பவர்களுக்குத் தான் ரோகம். எந்த நிலைக்கு சிவனும், ஸனகாதி தேவர்களும் ஆசைப்படுகின்றனரோ, அந்த பரிபூர்ண பக்திநிலையில் உள்ள புத்ரனைப் பெற்ற சசீதேவிதான் பாக்யசாலி'' என்றார். அன்னைக்கு இதைக் கேட்டு ஆனந்தம் உண்டாயிற்று.

சிறிது காலத்துக்குள்ளேயே ப்ரபு தனது மிகப் பரவசநிலையை சற்று குறைத்துக்கொண்டு இயல்பாக நாமஸங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். ''கலௌ கேசவ கீர்த்தனாத்''— கலியில் கேசவ கீர்த்தனம் தான் ஸர்வ ஶ்ரேஷ்ட ஸாதனம் என்பதற்கேற்ப நாம ஸங்கீர்த்தனத்திற்காகவே அவதரித்த ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு **பா**வாவேசத்தால் ஜனங்களை விட்டு விலகாமல், நவத்வீப ஜனங்களுக்கு மத்தியிலேயே தனது மதுர மதுர க்ருஷ்ண கீர்த்தனத்திற்கு அஸ்திவாரமிட்டார். சில நாட்களிலேயே மலர்ந்த தாமரையை வண்டுகள் மொய்ப்பதுபோல பக்த கூட்டம் அவரிடம் சேரலாயிற்று.

ஸ்ரீவாஸ் பண்டிதர் வீட்டில் தினமும் இரவு அனைவரும் சேர்ந்து விடிய விடிய நாம ஸங்கீர்த்தனம் செய்தனர். இரண்டு மூன்று மாதங்களிலேயே இந்த நாம ஸங்கீர்த்தனத்தின் புகழ் பரவ இதைக் காண இரவிலே ஸ்ரீவாஸ் பண்டிதரின் வீட்டு வாயிலில் ஜனங்கள் கூட ஆரம்பித்தனர். ஆனால் கீர்த்தனத்தின்போது கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிடுவார்கள். முக்கியமான, ப்ரபுவை நன்கறிந்த பக்த சிரோன்மணிகள்தான் உள்ளே இருப்பார்கள். அனைவருக்கும் உள்ளே செல்ல அனுமதி அளிக்கப்படவில்லை. ஏனென்றால் சரியான அதிகாரிகள்தான் உள்ளே செல்ல வேண்டும் என்ற நியமத்தைக் கடைப்பிடித்தனர்.

நன்நடத்தை உள்ளவர்கள், ப்ரபுவின் மீது பக்தி உள்ளவர்கள், நியமங்களை கடைப்பிடித்து பொறுமையுடன் வாயிலில் தினம் காத்திருப்பார்கள். அவர்களது ஶ்ரத்தையைக் கண்டு, ப்ரபு அவர்களை சரியான அதிகாரிகள் என்று உள்ளே அழைத்துக் கொள்வார். வீணான குதர்க்கவாதிகளும், வம்பர்களும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. இவர்களுக்கு பக்தியைவிட விமர்சனம்தான் பெரிதாக இருந்தது. உடனே அவர்கள் நாம ஸங்கீர்த்தனத்தைப் பற்றி ஊரில் தூஷணையாக பேச ஆரம்பித்தனர். சிலர் நிந்தனை செய்ய ஆரம்பித்தனர். சிலர் இரவெல்லாம் மஹா ப்ரபு தன் கோஷ்டியுடன் ''ஹரிபோல் ஹரிபோல்'' என்று இரைந்து பாடுவதால் தங்கள் நித்திரை கெடுகிறது என்று புகார் செய்தனர்.

யோகம், தபஸ், ஜபம் என பல வழிகள் இருக்கையில், இவர்கள் இப்படி கூச்சலிடுகிறார்கள் என்று கேலி செய்தனர்.


சிலர் கௌடதேசத்து முஸ்லீம் ராஜாவிடம் சென்று புகார் செய்துவிட்டு வந்தனர். ராஜாங்க தொந்தரவு நமக்கு நேருமோ என சில பக்தர்கள் அஞ்சினர். ஸ்ரீவாஸ்பண்டிதர் பெரிய ந்ருஸிம்ஹ பக்தர். எல்லோர் சொல்வதையும் கேட்டு அவரும் உள்ளூற சிறிது பயப்பட ஆரம்பித்தார். ஆனால் நரஸிம்ஹன் காப்பாற்றுவான் என தைரியமாக சொல்ல ஆரம்பித்தார். இந்த விஷயம் ப்ரபுவிடம் வந்தடைந்ததும் அவர் கலங்கவேயில்லை. இந்த பயந்த பக்தர்களை காப்பாற்ற எண்ணம் கொண்டார். அடுத்த நாள் தன்னை மிக அழகாக அலங்கரித்துக்கொண்டு, தாம்பூலத்தால் சிவந்த அதரங்களுடன் தைரியமாக வெளியே வந்து வீதியிலேயே நாம ஸங்கீர்த்தனம் செய்தார். இயற்கையாகவே அழகான ப்ரபு, அலங்காரத்தால் ஜொலித்தார். காண்பவர்கள் அசந்து போயினர். ப்ரபு நிர்பயமாக வீதியில் உலாவருவதைக் கண்டு அனைவரும் பிரமித்தனர். சில பண்டிதர்கள் ப்ரபுவிடம் அரசாங்க விரோதம் வருமே என உரைத்தனர். அதற்கு ப்ரபு, ''நல்ல காரியங்களுக்கு எதிர்ப்பு வரத்தான் செய்யும். பார்ப்போமே, யார் ஜெயிக்கிறோம் என்று'' என கவலையின்றி பதிலுரைத்தார்.

அன்று ஸ்ரீவாஸ் பண்டிதர் தனது க்ருஹத்தில் விதிவத்தாக நரஸிம்ஹ பகவானின் பூஜை செய்துகொண்டிருந்தார். திடீரென்று வீட்டுக்கதவை யாரோ தடதடவென தட்டும் ஓசை கேட்க பாதி பூஜையில் வாயிலில் யார்? என வினவினார். ''நீ யாரை பூஜை செய்கிறாயோ அவரை ப்ரத்யக்ஷமாக வாயிலில் கண்டு கொள்'' என பதில் வந்ததும், ஸ்ரீவாஸ் பண்டிதர் நடுநடுங்கி பயந்துகொண்டே கதவைத் திறந்தார். அங்கு மஹாப்ரபு அத்புத ரூப லாவண்யத்துடன் நின்று கொண்டிருந்தார். கிடுகிடுவென ப்ரபு உள்ளே நுழைந்து ஸிம்மாசனத்தில் அமர்ந்தார். ஸாக்ஷாத் விஷ்ணுவைப் போல் தோற்றம் அளித்தார். ஶங்க, சக்ர, கதா, பத்மங்களுடன் கழுத்தில் வைஜயந்தி மாலையுடன் ஸ்ரீவாஸ் பண்டிதருக்கு காட்சி தந்தார். பண்டிதர் பயத்தில் உறைந்துவிட்டார்.

ப்ரபு, நரஸிம்ஹரைப் போன்ற கம்பீரக் குரலில், ஸ்ரீவாஸ்! நீ என்னைத் தெரிந்து கொள்ளவில்லையா? பக்தர்களுக்கு ஒருநாளும் கஷ்டம் வராது. கஷ்டம் தரும் ஒவ்வொருவரையும் நான் தண்டிப்பேன். நீ பயப்படாதே. இப்போது பயமின்றி என்னை ஸ்துதி செய் என்று ஆச்வாசப்படுத்த ஸ்ரீவாஸ் பண்டிதர், ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள ப்ரஹ்லாத சரித்திரத்திலிருந்து நரஸிம்ஹஸ்துதியை கத்கதமான குரலில் சொல்ல ஆரம்பித்தார். பிறகு, விச்வம்பருக்கு ஜய்! ஸசீமாதாவுக்கு ஜெய்! பயமகற்றும் நரஸிம்ஹமூர்த்திக்கு ஜய் என்று கோஷித்தார். ப்ரபு உடனே, ''நீ உனது குடும்பத்துடன் என்னை பூஜித்து வேண்டிய வரம்கேள்'' என்றார்.

அப்பாவைப் போன்ற ஸ்ரீவாஸ் பண்டிதர், தனது நண்பன் ஜகன்னாதமிச்ராவின் சிறிய புதல்வன் நிமாயிதானே இவன் என்பதை அடியோடு மறந்து அவரை ஸாக்ஷாத் நரஸிம்ஹனாக **பா**வித்து தனது மனைவி குழந்தைகளுடன் பூஜித்தார். ப்ரபு ஒவ்வொருவரது சிரஸ்ஸிலும் தனது பங்கஜக்கரத்தை வைத்து ஆசீர்வதித்தார். பிறகு 'ஸ்ரீவாஸ், நீ எந்தக் கவலையும் படாதே. பயமின்றி நாமஸங்கீர்த்தனம் செய். பாதுஷா என்ன செய்ய முடியும்? வைஷ்ணவர்களைப் பிடிக்குமாறு ஆணை வந்தால் நான் முதலில் செல்வேன். காஜியை கூப்பிட்டு நானே அவரையும் நாம ஸங்கீர்த்தனம் செய்ய வைப்பேன். ஹிந்து, முஸ்லீம், பசு, பக்ஷி அனைவரையும் க்ருஷ்ண! க்ருஷ்ண! என கூவ வைப்பேன். நீ தைரியமாக இரு' என்றார்.

பிறகு ஸ்ரீவாஸ் பண்டிதரின் நாலு வயது பெண் குழந்தை நாராயணியை அழைத்து, ''குழந்தாய் நாராயணீ! நீ க்ருஷ்ண ப்ரேமையில் மூழ்கி நாமஸங்கீர்த்தனம் செய்'' என்று கூறினார். உடனே அந்தக் குழந்தை தன் நிலை மறந்து க்ருஷ்ண க்ருஷ்ண என கீர்த்தனம் செய்து கொண்டே மூர்ச்சை அடைந்தாள். கண்டவர் அனைவரும் கண்ணீர் பெருக ஆச்சர்யத்தில் ஆழ்ந்தனர். சிரித்துக் கொண்டே ப்ரபு, ''இப்படி நான் அனைவரையும் க்ருஷ்ண கீர்த்தனம் செய்ய வைப்பேன்'' என்றார். பிறகு உடனே அவரும் மூர்ச்சை அடைந்தார்.



சிறிது நேரங்கழித்து விழித்தெழுந்தாற்போல் பரபரவென விழித்து, ''பண்டிதரே! நான் எப்படி இங்கே வந்தேன்! என்ன நடந்தது, ஏதாவது விஷமம் செய்தேனா?'' என ஒன்றும் அறியாதவர்போல் கேட்டார். ''நீங்கள் என் தந்தைக்கு சமமானவர். நான் ஏதாவது தவறு செய்திருந்தால் பிழை பொறுத்தருளுங்கள் என மிகமிக வினயத்துடன் வேண்டிக் கொண்டார் ஸ்ரீவாஸ் பண்டிதர். ''ப்ரபோ! இப்படி என்னை ப்ரமத்தில் ஆழ்த்த வேண்டாம். நீங்கள் யாரென்று நான் அறிந்து கொண்டேன். உங்கள் சரணத்தில் நிரந்தரமாக அனுராக பக்தி இருக்க வேண்டும் என்று ஆசீர்வதியுங்கள்'' என வேண்டிக்கொண்டார். உள்ளத்தில் ப்ரசன்னமடைந்த ப்ரபு, வெளியில் வெட்கத்துடன் தன் வீட்டை நோக்கி நடந்தார்.

(தொடரும்)


**– ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 41

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு கல்கத்தாவில் (கோல்கத்தா) ஒரு மஹாத்மா வாழ்ந்து வந்தார். அவர் தேவியை தாந்த்ரிக முறைப்படி பூஜை செய்து வந்தார். ஆகவே, அங்கு வாழும் மக்கள் அவரை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவரைப் பற்றி கல்கத்தா கோர்ட்டில் ஒரு வழக்கு பதிவு செய்தனர். அக்காலத்தில் அவ்வழக்கு மன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் ஒரு ஆங்கிலேயர்.

அந்த ஆங்கிலேயர் அம்மஹாத்மாவைப் பார்த்து, ''உங்கள் மீது சில அவதூறுகளைச் சொல்லி ஒரு வழக்கு பதிவு செய்து உள்ளனர். நீங்களோ இந்த அவதூறுகளை எல்லாம் உண்மைக்குப் புறம்பானது என்று கூறுகின்றீர்கள். உங்களை எப்படி நம்புவது'' என்று கேட்டார். அம்மஹாத்மாவோ அந்த நீதிபதியைப் பார்த்து, ''உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருந்தால் கூறுங்கள். தீர்த்து வைக்கிறேன்'' என்று கூறினார். நீதிபதியும் தன் குடும்பம் லண்டனில் இருப்பதாகவும், அவர்களிடமிருந்து சில காலமாக ஒரு தகவலும் வரவில்லை என்றும், அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று கூற முடியுமா என்றும் கேட்டார்.

அந்த மஹாத்மா, தன்னை ஒரு அறையில் வைத்து சிறிது நேரம் பூட்டி விடுமாறு கூறினார். சில மணி நேரம் கழித்து வெளியே வந்த அவர், அந்த ஆங்கிலேயரின் குடும்பத்தாரிடம் இருந்து ஒரு கடிதம் பெற்று வந்ததாக கூறிக் கொடுத்தார். அக்கடிதத்தில் அவர்களிருக்குமிடத்தில் மழை, புயல், காரணமாக அனைத்து தகவல் சாதனங்களும் துண்டித்துவிட்டதாகவும், அதனால்தான் தொடர்புகொள்ள முடியவில்லை என்றும், தாங்கள் நலமாக இருப்பதாகவும் கூறி இருந்தனர். அதைப் பார்த்து அந்த ஆங்கிலேய நீதிபதி ஆச்சரியம் அடைந்தார். அதுவும் இல்லாமல் சிறிது காலம் கழித்து தகவல் சாதனம் சரியானவுடன் அவரது குடும்பத்தாரிடம்



இருந்து சேதி வந்தது. அதில் ஒரு இந்திய ஸாது தங்களை நேரில் சந்தித்து ஒரு கடிதம் பெற்றுச் சென்றதாகவும் கூறி இருந்தனர். அந்த ஆங்கிலேயர் அந்த சாதுவை விடுதலை செய்தது மட்டும் அல்லாது தனது பதவியையும் துறந்து, அந்த சாதுவின் சீடராகி அவர் மூலமாக ஶாக்த, தாந்த்ரிக, குண்டலினி யோகத்தைத் தெரிந்துகொண்டு அதை பயிற்சி செய்து, ஆங்கில மொழியில் அது விஷயமாக சில புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

## செய்திகள்

### மார்ச் 5-ந் தேதி முதல் மார்ச் 11-ந் தேதி வரை

சேலம், மிலிடரி ரோடு, ஸ்ரீ க்ருஷ்ணா ஆஶ்ரமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ குருவாயூரப்பன் ஆலயத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் இரவு 7 மணி முதல் 9 மணி வரை ''பக்த சரித்ரம்'' பற்றி ஸப்தாஹ உபன்யாஸம் செய்தார்கள்.

# ஸ்ரீ ப்ருந்தாவன தர்சனம்

ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் ரகுநாத் ஆஶ்ரமம், ஸ்ரீ ராதா நிவாஸில், நமது மிஷன் சார்பில் நடைபெற்ற ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவத்தில், கலந்துகொள்ள வந்திருந்த பாகவதர்களுக்கும் பக்தர்களுக்கும் ஸ்ரீ ப்ருந்தாவனம் பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் கொடுத்த குறிப்புகள், பக்தர்கள் பலரின் வேண்டுகோளின்படி மதுரமுரளியில் ப்ரசுரிக்கப்படுகிறது.

---

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனின் லீலாஸ்தானமான இந்த ப்ருந்தாவனத்திற்கு வந்திருக்கும் நாம் அனைவரும் பாக்யசாலிகள். எந்த ப்ருந்தாவனம், ஆண்டாள், ஆதி சங்கரர், மதுசூதன ஸரஸ்வதி, சைதன்ய மஹாப்ரபு, ஸ்ரீ வல்லபர், ஹரிவம்ஸர், நிம்பார்கர், மீரா, ஊத்துக்காடு கவி போன்ற பல மஹாத்மாக்களுக்கு ஜீவன ஆதாரமாக இருந்ததோ, அந்த ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ க்ருஷ்ண க்ருபையால் நாம் இன்று உள்ளோம்.

மஹான்கள் எல்லோரும் ப்ருந்தாவனத்தில் ஒரு புல்லாய், கல்லாய், ஏதேனும் ஒன்றாய் இருக்கும் ஒரு பிறவிக்கு ஆசைப்படுகிறார்கள் என்றால், ப்ருந்தாவனத்தின் மஹாத்மியத்தை நம்மால் எடுத்துக்கூற முடியுமா?

ஸ்ரீ ராதாராணியினுடைய அந்தப்புரமான இந்த ப்ருந்தாவனத்திற்கு ஒருவன் தன் சொந்த முயற்சியால் வந்துவிட முடியாது. முதலில் ப்ருந்தாதேவியினுடைய அனுக்ரஹமும், அடுத்து ஸ்ரீ ராதாதேவியினுடைய அனுக்ரஹமும், அடுத்து ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் அனுக்ரஹமும் ஒருவனுக்குக் கிடைத்தால்தான் ப்ருந்தாவனத்திற்குள் வரமுடியும் என்பது மஹான்களின் தீர்மானமான அபிப்ராயமாக இருக்கிறது. குரு க்ருபையினாலும் பகவத் க்ருபையினாலும்தான் இந்த அரிய வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது.

ப்ருந்தாவனத்தில் தரிசனம் செய்ய வேண்டிய லீலா ஸ்தானங்கள் பின்வருமாறு :-

**ப்ருந்தாவன பரிக்ரமா :**

1. ப்ருந்தாவன பரிக்ரமா செய்ய சுமார் 4 மணிநேரம் ஆகும். தகுந்த துணைகொண்டு செல்லலாம்.
2. பகவான் காளீய நர்த்தனம் செய்த காளீயதாக் மற்றும் சிறுவயதில் மண்ணினால் வீடுகட்டி விளையாடிய இடமும் பரிக்ரமா பாதையில் உள்ளன.

**யமுனையும் அதன் கரையிலுள்ள ஸ்தலங்களும் :**

3. நாம் தங்கியிருக்கும் ரகுநாத் ஆஸ்ரமத்திற்கு அருகேயுள்ள ரங்கஜி மந்திருக்கு எதிரேயுள்ள பாதையில் சென்றால் யமுனைக்குச் செல்லலாம்.
4. கேசியை வதம் செய்த கேசி காட், பகவான் வஸ்த்ராபஹரணம் செய்த வ்ருக்ஷம், சீர் காட், உத்தவன் கோபிகைகளிடம் பக்தியைப் ப்ரார்த்தித்த கட்டம் இவையனைத்தும் யமுனைக் கரையிலேயே உள்ளன.
5. த்ருவன் தபஸ் செய்த மதுவனம் யமுனைக்கு அக்கரையில் உள்ளது.

**நடக்கும் தொலைவிலுள்ள லீலா ஸ்தானங்கள் :-**

6. நம்முடைய பாகவத ஸப்தாஹ ஸதக்ரது நடைபெறும் ரகுநாத் ஆஸ்ரமத்திற்கு அடுத்தபடியாக இடப்புறத்தில் உள்ள காத்யாயனி மந்திரில் உள்ள காத்யாயனி தேவியைதான் கோபிகைகள் ஹேமந்த ருதுவின் முதல் மாதமாகிய மார்கழி மாதத்தில், கண்ணனை பதியாக அடைவதற்காக நோன்பு இருந்தனர். இன்றும், நாம் அந்த காத்யாயனிதேவியை தரிசனம் செய்யலாம்.
7. ப்ருந்தாவனத்தில் தென்னிந்திய ஸம்ப்ரதாயப்படி ராஜகோபுரத்துடன் காணப்படுவதுதான் ஸ்ரீ ரங்கஜி மந்திர். இது ப்ராசீனகாலத்து கோவில் அன்று. சுமார் 200-300

வருடங்களுக்குள் ஏற்பட்ட ஒரு கோவில். ஸ்ரீ ஆண்டாள் ப்ருந்தாவனத்தை மங்களாஸாஸனம் செய்ததாலேயே ப்ருந்தாவனம் திவ்யதேசமானது.

ஆண்டாளின் பாசுரங்களை வழிகாட்டியாகக் கொண்டே நாம் ப்ருந்தாவனத்தை மிகவும் அழகாக ஸேவிக்க முடியும். ஆனால் என்ன ஆச்சர்யம்! ஆண்டாள் தனது ஆயுட்காலத்தில் ஒருமுறைகூட ப்ருந்தாவனம் வந்ததாகத் தெரியவில்லை.

காஞ்சிபுரத்தில் தென்னிந்திய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஒரு வைஷ்ணவ ஸன்யாஸி இருந்தார். அவர் ஸுதர்ஸன உபாஸகர். ஆண்டாள் பாடிய ப்ருந்தாவனத்தில் ரங்கமன்னாருடன் ஆண்டாளுக்கு ஒரு கோயில் அமைக்க அவருக்கு வெகுநாளைய ஆசை. ஒரு கோடீஸ்வரனான மார்வாடி, புற்றுநோய் கண்டு மரணத் தருவாயில் இருந்தான். அந்த நோயிலிருந்து தன்னைக் காப்பாற்றி, தனக்கு வாழ்வளிக்குமாறு இந்த சுவாமிகளிடம் ப்ரார்த்தித்தான். கருணையே வடிவான சுவாமிகள் அவனது நோயை நீக்கி நீண்ட ஆயுளை அனுக்ரஹம் செய்தார். அதற்கு அந்த சேட், தான் என்ன கைம்மாறு செய்யவேண்டுமென்று வேண்டினான்.

சுவாமிகள், ப்ருந்தாவனத்தில் ரங்கமன்னாருடன் ஆண்டாளுக்கு ஒரு கோயில் அமைக்கும்படி ஆஜ்ஞை செய்தார். சுவாமிகள் ஆலோசனைப்படி இங்ஙனம் உருவானதே ரங்கஜி மந்திர். இன்றும் இங்கு தென்னிந்திய ஸம்ப்ரதாயப்படி தென்னிந்திய வைஷ்ணவர்களால் பூஜை செய்யப்படுகிறது. வெகு விமரிசையாக இங்கு உத்ஸவங்கள் கொண்டாடப்படுகின்றன.

8. ரங்கஜி மந்திருக்கு எதிரே கோவிந்தஜீ மந்திர் உள்ளது. இது ஸ்ரீவல்லபரால் அமைக்கப்பட்டது. இந்த கோவிலையும் தரிசனம் செய்யலாம்.

9. நாரதர் மூலமாக க்ருஷ்ணருடைய ரூபலாவண்யத்தைக் கேள்விப்பட்ட கைலாசவாசியான ஸ்ரீபரமேஶ்வரன் ப்ருந்தாவனம் வந்து க்ருஷ்ணனை தரிசனம் செய்ய

ஆசைப்பட்டார். ஆனால் அவர் ராதாராணியின் அனுக்ரஹத்தைப் பெறாமல் ப்ருந்தாவனத்திற்குள் நுழைய முயன்றதால், ப்ருந்தாவனம் வந்தும் அவருக்கு க்ருஷ்ண தரிசனம் ஏற்படவில்லை. அவர் ப்ருந்தாவனத்திலேயே லிங்க ஸ்வரூபமாக - கோபேஶ்வரராக வீற்றிருந்தார்.

ஒரு ஸமயம் ராதாதேவி கோபேஶ்வரருக்குப் பூஜை செய்ய வந்தார். கண்ணனும் ராதையைப் பின்தொடர்ந்து அங்கு வந்தான். கோபேஸ்வரர் அப்பொழுது ஆவிர்பவித்து, ராதாக்ருஷ்ண ஆலிங்கனத்தை தர்சனம் செய்தார். இந்த கோபேஶ்வரர் மந்திர், ரங்கஜீ மந்திரிலிருந்து நடந்து செல்லும் தொலைவிலேயே உள்ளது.

10. நிதிவனம் என்ற இடம் பகவான் நித்யம் ராஸோத்ஸவம் செய்யுமிடமாகும். இங்கு ஏராளமாகக் காணப்படும் செடி கொடிகளும், வானரங்களும் உண்மையில் மஹாத்மாக்களே. பகவானுடைய ராஸத்தில், இரவில் இவர்கள் அனைவரும் கலந்துகொள்கிறார்கள். இன்றும் இங்கு ராஸோத்வம் நடைபெறுவதற்கு அடையாளமாக அந்த நிதிவனத்தில் புது புஷ்பங்களும், தாம்பூலங்களும் காலையில் இரைந்து கிடப்பதைக் கண்டவர்கள் உண்டு. இதைப் பரிக்ஷை செய்ய முயன்று பலர் குருடர்கள் ஆனதும் உண்டு.

அக்பருடைய அமைச்சரவையில் இருந்த தான்ஸேன் என்ற ஸங்கீதவித்வானின் குருவாகிய ஸ்வாமி ஹரிதாஸர் இந்த நிதிவனத்தில்தான் இருந்துவந்தார். அவர் ராதையின் அஷ்ட ஸகிகளில் முக்கியமான ஸகியாகிய லலிதாஸகியின் அம்ஸமாக அவதரித்தவர். அவருடைய ஸமாதி இன்றும் நிதிவனத்தில் உள்ளது. ராமக்ருஷ்ண பரமஹம்ஸரும், அவருக்கு தாந்திரிக ஸாதனை பயிற்றுவித்த பைரவி ப்ராம்மணியும் சிலகாலம் இங்கிருந்திருக்கிறார்கள்.

11. எந்த கரத்தினால் பகவான் ஈரேழு லோகங்களுக்கும் அபயம் தருகின்றானோ, அந்த கரத்தினால் ராதாராணிக்கு பாதஸேவை முதற்கொண்டு எல்லா ஸேவைகளும் செய்த இடமான ஸேவா குஞ்ச் நிதிவனத்திற்கு பக்கத்தில் உள்ளது.

12. ராஜபோகமான வாழ்க்கையைத் துறந்து, துறவு பூண்டு ப்ருந்தாவனம் வந்த ஸ்ரீ மீரா சிலகாலம் தங்கியிருந்த க்ருஹம் நமக்கு ஒரு தர்சன ஸ்தலமாகும். அதுவும் ஸேவா குஞ்சத்திற்கு ஸமீபத்திலேயே உள்ளது.

13. மீரா க்ருஹத்திற்கு ஸமீபத்திலேயே சைதன்ய மஹாப்ரபுவின் ப்ரதான ஶிஷ்யரான ஸநாதனகோஸ்வாமியின் க்ருஹமும், ஸமாதியும் உள்ளது.

14. அதற்கு ஸமீபத்தில், சைதன்ய மஹாப்ரபு இங்கு தங்கி, மஹாமந்திரமான, ''ஹரே ராம.....'' மந்திரத்தை உலகம் முழுவதும் பரப்பிய இம்லிதல் உள்ளது. அதையும் சென்று தரிசிக்கலாம்.

15. அதன் ஸமீபத்தில் ராதாமாதவ மந்திர் உள்ளது. இதுவும் ஒரு பழமையான மந்திர்.

16. கோபேஶ்வர மந்திரிலிருந்து நேரே சென்றால் பகவான் ''பர்ஹா பீடம்'' என்ற ஶ்லோகத்தின் படி வேணுகீதம் செய்த வம்ஶீவடம் இன்றும் உள்ளது. சென்று தரிசனம் செய்யலாம்.

17. ப்ருந்தாவனத்தில் மிகவும் ப்ராசீனமான ''பாங்கே விஹாரி மந்திர்'' மிகவும் அழகானது. இந்த பாங்கே விஹாரிக்குதான், மீரா தான் அணிந்து வந்த அத்தனை ஆபரணங்களையும் ஸமர்ப்பித்தாள். பாங்கேவிஹாரியை தரிசனம் செய்யவந்த ராமக்ருஷ்ண ப்ரமஹம்ஸர், தரிசனம் செய்தவுடன் **பா**வஸமாதியில் ஆழ்ந்துவிட்டார்.

18. பரனூர் மஹாத்மா ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் ஸ்தாபித்துள்ள ஸ்ரீ ப்ரேம மாதுரிகுஞ்ச் கோவிலில் வம்ஸீதரனையும் ராதாராணியையும் தரிசனம் செய்யலாம். நாராயண தீர்த்தர் ஆராதித்த ஜகன்மோஹன க்ருஷ்ணரையும் அங்கு தரிசனம் செய்யலாம்.

19. பகவானுடைய அவதார இடமான மதுராவையும் அங்கிருந்து வஸுதேவர் ஸ்ரீ க்ருஷ்ணனை இரவில் தூக்கிச் சென்றடைந்த கோகுலத்தையும் சென்று தரிசிக்கலாம். மதுராவும், கோகுலமும் ஒரே பாதையில் உள்ளன.

20. ஒரு காலத்தில், இப்பொழுது நாம் காணும் ப்ருந்தாவனம் கட்டிடங்கள் ஏதுமில்லாமல், பாகவதத்தில் வர்ணித்துள்ளது போல் பல்வேறு வ்ருக்ஷங்களும், பக்ஷிகளும், மிருகங்களும் நிறைந்த அடர்ந்த காட்டு ப்ரதேசமாக இருந்தது. இங்கிருந்து தொலைவில் ‘நந்தக்ராம்’ என்னுமிடத்தில்தான் நந்தபாபாவின் அரண்மனை இன்றும் உள்ளது. இங்கிருந்துதான் ஸ்ரீக்ருஷ்ணன் தன் ஸகாக்களுடன் மாடுகளை மேய்க்க இந்த ப்ருந்தாவனத்திற்கு வந்து மாலையில் திரும்புவது வழக்கம்.

21. பகவான் ராதா தேவிக்கு அமைத்த ராதாகுண்டம், ராதாதேவி பகவானுக்கு அமைத்துத்தந்த ஶ்யாமகுண்டம், ராதாதேவியின் பிறந்த இடமும், வ்ருஷபானு மஹாராஜாவின் அரண்மனையான பர்ஸானா, நந்தக்ராம், கோவர்தனமலை, மானஸரோவர் ஆகிய ஸ்தலங்கள் ஒரே பாதையில் உள்ளன.

22. ராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் பத்னியான சாரதாதேவி ப்ருந்தாவனத்தில் சிலகாலம் தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த இடத்தில் இன்று ராமக்ருஷ்ண மடம் உள்ளது. மதுரா செல்லும் வழியில், இந்த இடத்தையும் சென்று தரிசிக்கலாம்.

23. உலகம் முழுவதும் க்ருஷ்ண பக்தி இயக்கத்தை ஸ்தாபித்த ப்ரபுபாதரின் ஸமாதியும், அவர் ஸ்தாபித்த க்ருஷ்ண மந்திரமும் மதுரா செல்லும் வழியிலுள்ளது.

இவைகளே ப்ருந்தாவனத்தில் தரிசனம் செய்யவேண்டிய லீலா ஸ்தலங்களாகும்.

க்ருஷ்ண கீர்த்தனம் செய்து கொண்டு ஸத்ஸங்கத்தில் மனதை செலுத்தி, லௌகீகமான குறைபாடுகளை பார்க்காமல், கிராமிய விஷயங்கள் பேசாமலிருந்தால் ப்ருந்தாவன யாத்திரையின் பூர்ண பலனைப் பெறலாம். எப்படி ஒரு க்ஷேத்திரத்தில் செய்யும் புண்யம் பன்மடங்காகுமோ, அவ்வாறே பாபங்களும் பன்மடங்காகும்.

ஸ்ரீ ஹரி:

**பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்**

**சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா**

(நாம ஸப்தாஹம்)

26-2-2001 **முதல்** 4-3-2001 **வரை**

## பகவந்நாம ஸங்கீர்த்தனமேளா

சென்னை மயிலாப்பூர், R.R. ஸபாவில், பிப்ரவரி 26-ந் தேதி முதல் மார்ச் 4-ந் தேதி வரை தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥''**

அகண்ட நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. இதில் பெருமளவில் பக்தர்களும் பள்ளி குழந்தைகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

பிப்ரவரி 26-ந் தேதி, குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மெட்ரிகுலேஷன் பள்ளி, வடபழனி, சென்னை - 26லிருந்து 100 குழந்தைகள் நாம ஸங்கீர்த்தனத்தில் கலந்துகொண்டனர்.

பிப்ரவரி 27-ந் தேதி, விவேகானந்தா வித்யாலயா, முடிச்சூர், திருவொற்றியூர், அம்பத்தூரிலிருந்து, 200 குழந்தைகள் பங்கு கொண்டனர்.

பிப்ரவரி 28-ந் தேதி, ஸ்ரீ சீதாராம் வித்யாலயா, மேற்கு மாம்பலம், சென்னை - 33லிருந்து 75 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

மார்ச் 1-ந் தேதி, பாரதிய வித்யா பவன், மயிலாப்பூர், சென்னை - 4லிருந்து 60 குழந்தைகள் கலந்துகொண்டனர்.

மார்ச் 2-ந் தேதி, பத்மா சேஷாத்ரி பாலபவன் பள்ளிகள் கே.கே. நகர், தி.நகரிலிருந்து 200 குழந்தைகள் நாமஸங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டனர்.

மார்ச் 3-ந் தேதி, ஸாவித்ரியம்மாள் ஓரியன்டல் பள்ளி, சென்னையிலிருந்து 30 குழந்தைகள் பங்குகொண்டனர்.

**மார்ச் 4-ந் தேதி பூர்த்தி நாள்**

பழைய கூடலூரிலிருந்தும், பெங்களூரிலிருந்தும் பக்தர்கள் 100 பேர் நாமஸங்கீர்த்தனத்தில் கலந்துகொண்டனர்.

மலைப்பட்டு, மாஹாண்யம் பள்ளி குழந்தைகள் மதியம் நாமஸங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டனர்.

பிறகு விவேகானந்தா வித்யாலயா, பெரம்பூர், குரோம்பேட்டை, வ்யாஸர்பாடியிலிருந்து 200 குழந்தைகள் பங்கு கொண்டனர்.

மயிலை ஸம்ஸ்க்ருத கல்லூரி மாணவர்கள் நாம ஸப்தாஹத்தில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ ஸ்வாமிகள் நிறைவு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள். இங்ஙனம் நாம ஸப்தாஹம் இனிதே நடைபெற்றது.

---

ஸ்ரீ ஹரி:

**பூஜ்ய முரளீதர ஸ்வாமிகளின்**

## சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரில் ''சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா'' செப்டம்பர் 1999 முதல் இயங்கி வருகின்றது. அதன் கிளைகளில் ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் தினமும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞைபடி சென்னை மற்றும் அதன் சுற்றிலுள்ள 27 பள்ளிகளில் இறைவணக்கத்தில் ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்று வருகின்றது. இதன் விவரம் நமது மதுரமுரளியில் ஜூலை 2000 மற்றும் ஆகஸ்ட் 2000 இதழ்களில் ப்ரசுரமாகியுள்ளன. தற்பொழுது கீழ்கண்ட பள்ளிகளிலும் இறைவணக்கத்தில்

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥''*

அகண்ட நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

1. Vivekananda Vidyalaya, Ambattur, Chennai
2. Bharathiya Vidya Bhavan, Mylapore, Chennai - 4
3. Savithiri Ammal Oriental Higher Secondary School, Chennai.

# தவம்

தவம்தான் ஒரு குருவிற்கு அழகு. பௌருஷம் இல்லாத கணவனை ஒரு மனைவி எப்படி மதிக்கமாட்டாளோ, அது போல தவம் இல்லாத குருவை சீடர்கள் மதிக்கமாட்டார்கள். தவம், தவம் என்று எல்லோராலும் பேசப்பட்டாலும் அதன் உண்மையான விஷயத்தை மக்கள் அறியமாட்டார்கள். தெய்வப்புலவரான திருவள்ளுவர் திருக்குறளில் எவை எல்லாம் தவம் என்று விவரிக்கிறார் என்று பார்ப்போம்.

## அதிகாரம் - தவம்

1. *உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
   *அற்றே தவத்திற்கு உரு*

மனிதனுக்கு உபாதைகள் இயற்கையாகவும், செயற்கையாகவும் ஏற்படுவது உண்டு. அப்படி இரண்டு விதமாக ஏற்படும் உபாதைகளையும் பொறுத்துக்கொள்வதும், தனக்கு தீங்கு செய்யும் பிராணிகள் உட்பட எதற்கும் தீங்கு செய்யாமையும் தவத்திற்கு வடிவமாகும் என்கிறார் திருவள்ளுவர்.

2. *தவமும் தவமுடையார்க்காகும்அவம் அதனை*
   *அ:திலார் மேற்கொள்வது*

ஒருவர், தவத்தினை பல பிறவிகளில் செய்து வந்தால்தான் ஒரு பிறவியில் அது சித்தியாகும். இதைத்தான் வள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார். ஆகவே, தவத்தை முற்பிறவிகளில் செய்யாமல் இப்பிறவியில்தான் ஆரம்பித்து முயற்சி செய்வது ஒரு பலனையும் தராது என்கிறார். அதனால் ஒருவருக்கு தவம் என்பது ஒரு பிறவியில் கைகூடும் என்பது இயலாது. அது பல பிறவிகளாக முயற்சி செய்து அடைவது என்பது திருவள்ளுவரின் எண்ணம்.

3. *துறந்தார்க்கு துப்புரவு வேண்டி மறந்தார்க்கொல்*
   *மற்றை யவர்கள் தவம்*

இக்குறளில் அழகாக இல்லறத்தார்கள் ஏன் தவம் மேற் கொள்வதில்லை என்பதை ஒரு உயர்ந்த நோக்குடன் பார்த்து ஒரு

ரசிக்கத்தக்க, போற்றத்தக்க, கருத்தை கூறுகின்றார். துறவியர் அல்லாத மற்ற இல்லறத்தார்கள் அனைவரும் தவம் என்பது மிகவும் உயர்ந்தது என்பதை நன்கு அறிந்த போதிலும், தவம் செய்பவர்களுக்கு உணவும், உடையும் கொடுத்து கவனிக்க யார் உள்ளார்கள் என்ற கவலையில்தான் அவர்கள் தவம் இயற்ற செல்லவில்லை போலும் என்ற உயர்ந்த பார்வையுடன் கூறுகின்றார்.

4. *வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்*
   *ஈண்டு முயலப் படும்*

தவத்தின் பயனாக ஒருவன் எவற்றை எல்லாம் ஆசைப்படுகிறானோ, அவற்றை எல்லாம் இம்மையிலும், மறுமையிலும், விண்ணுலகத்திலும், பெறக்கூடும். ஆகையால் அறிவுள்ளவர்கள் இம்மையில் எப்பாடுபட்டாவது தவத்தை மேற்கொள்வார்கள்.

5. *தவம்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்*
   *அவஞ் செய்வார் ஆசையும்பட்டு*

மிகவும் உயர்ந்ததான, இத்துணை பெருமை வாய்ந்த தவ வாழ்க்கையை யார் மேற்கொள்கிறார்களோ, அவர்களே உலகத்தில் தங்களுக்கு விதிக்கப்பட்ட செயலைச் செய்தவர்கள் ஆவார்கள். பிறவி பேற்றினை அடைந்தவர்கள் ஆவார்கள். மற்றவர்கள் எல்லாரும், பல பிறவிகளில் கொண்டுதள்ளக் கூடிய பொருளின்ப ஆசை வலையில் அகப்பட்டு தமக்குத் தாமே கேடு செய்தவர்கள் ஆவார்கள்.

6. *ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்*
   *எண்ணின் தவத்தான் வரும்*

அறியாமையால் தமக்கு தீங்கு விளைவித்தவரை அழித்து விட நினைத்தாலும், தவம் இயற்றுபவர்களால் அழித்துவிட முடியும். தவமியற்றுபவர்கள், தம்முடைய உதவியை நாடி வந்தவர்களை விதிப்படி அவர்கள் யமனுலகை அடைவதாக இருந்தாலும், வாழவைக்க நினைத்தால், அவர்களால் வாழ வைக்கவும் முடியும். பொதுவாக தவம் இயற்றுபவர்கள் இம்மாதிரி காரியங்களில் எல்லாம் ஈடுபட மாட்டார்கள் என்ற போதிலும்

அவர்கள் அத்தகைய வல்லமை உடையவர்கள் என்பதை இப்பாட்டின் மூலம் குறிப்பிட்டார் போலும்.

7. *சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு*

உருக்கப்படும் பொன்னானது தீயினால் சுடச்சுட தன்னுடைய மாசுகள் எல்லாம் நீக்கப்பட்டு எங்ஙனம் ஒளிமிகுந்து காணப்படுகிறதோ, அதுபோல் தவவாழ்க்கை மேற்கொள்பவர்களுக்கு, துன்பம் வரவர அத்துன்பத்தினால் மாசு எல்லாம் நீங்கப் பெற்று தங்கத்தைப் போல் ஒளிமிகுந்து காணப்படுவார்கள்.

8. *தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயி ரெல்லாம் தொழும்*

இத்தகைய உயர்ந்த நல்வாழ்க்கையை மேற்கொண்டு அத்தவ வாழ்க்கையின் பயனாக தன்னைத்தான் அறிந்துகொண்ட அந்த உத்தமர்களை, ஞானம் அடையப் பெறாத மற்ற மன்னுயிர்கள் எல்லாம் கை கூப்பித் தொழும்.

9. *கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட்டவர்க்கு*

உலகத்தில் எவராலும் வெல்லமுடியாத காலனையும், உயர்ந்த தவ வாழ்க்கை வாழ்பவர்கள் வெற்றிகொள்ள முடியும் என்கிறார்.

10. *இவர் பலராகிய காரணம் நோற்பார்*
*சிலர் பலர் நோலாலதவர்*

உலகத்தில் கல்வி, கேள்வி, செல்வம், புகழ், அழகு, இவைகளில் ஒன்றை பெற்றவர்களாக சிலரும், இவைகளில் ஒன்றுகூட பெறாதவர்களாக பலரும் இருப்பதற்கு காரணம் உலகத்தில் தவ வாழ்க்கை மேற்கொள்பவர்கள் சிலரே என்பதை இக்குறள் காட்டுகிறது.

மேற்கூறிய 10 குறள்களின் மூலம் வள்ளுவர் மிக அழகாக தவத்தின் இலக்கணத்தையும், தவத்தின் அவசியத்தையும், தவ வழியில் நிற்பவர்களின் இயல்பையும், தவத்தின் பயனையும், தவத்தின் மேன்மையையும் எடுத்துரைக்கின்றார்.

# குருவாயூரப்பன் - 4

## குருவாயூர் கோவிலின் ஆலய அமைப்பு

குருவாயூர் கோவில் விஸ்வகர்மாவால் அமைக்கப்பட்டதால் மிக அத்புதமானது. பகவான், கிழக்கு நோக்கி, நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். வாசலில் கோபுரம், உள்ளே நுழைந்ததும் யானைப் பந்தல் என்னும் ப்ரதேசம் இருக்கிறது. பற்பல அலங்காரங்களால் கண்ணையும் மனதையும் கவரும் வண்ணம் ஸ்வர்ணமயமான த்வஜஸ்தம்பம் நிற்கும். அதன் பிறகு பெரியதோர் பலிபீடம். அதுவே குருவிற்கும் வாயுவிற்கும் இருப்பிடம். த்வஜஸ்தம்பம் அருகே விசேஷமான வழிபாடுகள், ப்ரார்த்தனை, அன்னப்ராஸ்னம், விவாஹம், துலாபாரம் முதலிய வைபவங்கள் நடைபெறுகின்றன. குருவாயூரில் துலாபாரம் மிகவும் விசேஷம். தன்னுடைய ப்ரார்த்தனையை பூர்த்தி செய்த பகவானுக்கு எடைக்கு எடை, நேந்த்ரங்குலை, குந்துமணி, தான்யம் என்று தன் சக்திக்கேற்றபடி பொருட்களை வேண்டிக்கொண்டபடி நிறுத்தளிக்கிறார்கள்.

த்வஜஸ்தம்பத்தின் இரு புறங்களிலும் நடைபாதைவரை வாத்யகோஷம், பஜனை, நாம கீர்த்தனம் முதலியன நடைபெறும். நடைபாதையின் மேலே பல புராண கதைகளின் சித்ரமும், பக்தர்களின் படமும் உள்ளது. அதில் குருவாயூர் பத்மநாபன் என்ற ப்ரஸித்தமான யானையின் படம் முக்யம். அந்த யானை பல ஆண்டுகள் கோவில் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தது. ஸமீபத்தில் கேசவன் என்னும் யானைகூட பகவானின் கைங்கர்யத்தில் பக்தியுடன் ஈடுபட்டிருந்ததை நாம் அறிவோம்.

கோபுர த்வாரத்தைக் கடந்து சென்றால் கண்ணைக்கவரும் தீபஸ்தம்பம் உள்ளது. வாசல் மாடம் வழியாக உள்ளே செல்லும்பொழுது அறுத்துக்கெட்டிப்படி என்றோர் இடமிருக்கிறது. இதுதான் ப்ரஸித்தமான மேப்பத்தூர் நாராயண பட்டத்திரி என்ற மஹாத்மா நாராயணீயம் பாடிய இடம். உள்ளே கூத்தம்பலம்

என்றோர் மண்டபம் இருக்கிறது. அங்கே பல சிற்ப வேலை. அமைந்த சிலா ரூபங்களும் சித்ரங்களும் இருக்கின்றன. இங்கு உத்ஸவ காலத்தில் சாக்கியர் கூத்து என்று ஒன்று நடக்கும். மற்ற ஸமயங்களில் பாகவத ஸப்தாஹம், நாம ஜபம் முதலியன நடைபெறும்.

சாக்கியார் என்னும் வம்ஶத்தவர், பாரத ராமாயணாதி கதைகளை ஹாஸ்யத்துடன் காலக்ஷேபமாக நடத்துவதே சாக்கியார் கூத்தெனப்படும். மேற்கு கோபுரத்தின் வடபாகத்தில் மடப்பள்ளியும், பெரிய ஸமாராதனைகள் நடத்த பெரிய கட்டிடமும் இருக்கிறது. அதற்கு ஊட்டுப்புரை என்று பெயர். அங்கிருந்து வடபுறம் வந்தால் நடைப்புரை அல்லது யானை பந்தல் என்ற இடம் இருக்கிறது. ஸ்வாமியை யானை மீது வைத்து வலம் வரும்பொழுது இங்கு இறங்கி ஒரு மண்டகப்படி நடக்கும். அச்சமயம், பலவகை வாத்யங்களும் ''தாயம்பகை'' என்ற மேள விசேஷமும் நடைபெறும்.

ஒரு ஸமயம், ஆதிஶங்கரர் யோகதசையில் ஆகாயமார்கமாக செல்லும்பொழுது குருவாயூரில் ஏகாதஶீ உத்ஸவம் கண்டு யானைப் பந்தலில் இறங்கி கோவிலில், எல்லாம் குருவாயூரப்பன் மயமாக இருப்பதைக் கண்டார். அங்கு ஸகுண நிர்குண ஐக்யம் என்ற வேதாந்த ப்ரகரண க்ரந்தத்தை இயற்றினார். அப்பொழுது ஆகாயத்திலிருந்து அமரர் புஷ்பமாரி பொழிந்தனர் என்பதாக ஒரு வரலாறு. இதை இன்றைக்கும் நினைவூட்ட உத்ஸவகாலத்தில் அந்த இடத்தில் மட்டும் மூடாமல் மற்ற இடங்களில் பந்தல் போடுவார்கள். ஸ்வாமி அங்கு எழுந்தருளும்பொழுது தேவர் புஷ்பவர்ஷம் செய்வார்கள். ஒரு நிமிடம் அனைவரும் மௌனமாக இருப்பார்கள். இந்த இடத்தில் பகவானை ஸேவிப்பது விசேஷம். ஆதிஶங்கரரே இந்த கோவிலில் உள்ள பூஜாக்ரமத்தில் சில விசேஷங்களை ஏற்படுத்தினார் என்பர் பெரியோர்.

(தொடரும்)

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 68

ஸர்வஶாஸ்திரங்களின் ஸாரம் ஆத்மஸாக்ஷாத்காரம் அடைவதே. எது மோக்ஷம் என்பதில் ஸித்தாந்தங்களில் பேதமிருந்தாலும், மோக்ஷமடைவதே புருஷார்த்தம் என்றே ஸகல ஸித்தாந்தங்களும், ஶாஸ்திரமும் கூறுகின்றன. இத்தகைய பேதங்களும், ஸந்தேகங்களும் அத்வைத நிலையை அடையும் வரை மட்டுமே ஒருவனுக்கு இருக்க முடியும். அதற்கு மேல் இருக்க முடியாது.

நேற்று இரவு நான் ஒரு காட்சியை தரிசனம் செய்தேன். அதுதான் மோக்ஷமா? என்று ஒருவர் கேட்டால், அது நிச்சயம் மோக்ஷமில்லை என்று அர்த்தம். ஏனெனில், ஒருவர் ஆத்மாவை பார்த்துவிட்டால், அவருக்கு தான் பார்த்தது ஆத்மாதானா என்று சொல்வதற்கு, மற்றொருவர் தேவையில்லை. அங்கு அவர் தன்னுடைய சொரூபத்தையே பார்த்துக்கொள்கிறார். அங்கு அவருக்கு குழப்பமோ, ஸந்தேகமோ, ஸஞ்சலமோ இருக்கவே முடியாது.

இதை பகவான் ரமணமஹரிஷிகள், ‘உள்ளது நாற்பது’ எனும் கிரந்தத்தில் கடைசியில் அழகாகச் சொல்கிறார். ஜீவன்முக்தி என்றால் என்ன? சிலர் கைவல்யம் என்கின்றனர். சிலர் அதை கைலாசம் என்கின்றனர். சிலர் அதை வைகுண்டம் என்கின்றனர். எது சரி? இம்மாதிரி அநேக விதமான கேள்விகளும், குழப்பங்களும், ஸஞ்சலங்களும் யாருக்கு எழுகின்றனவோ, அது எங்கிருந்து வருகின்றது, யாருக்கு வருகின்றது என்று விசாரித்து அறிந்து விட்டால் அதுவே மோக்ஷம் என்கிறார். அதாவது தான் பார்த்தது மோக்ஷமா, இல்லையா என்று யாருக்கு தோன்றுகிறதோ, அவர் தன்னை விசாரித்து அறிந்தால், அதுவே மோக்ஷம்.

*சௌரியங்காட்டினை சழுக்கற்றதென்றே*
*சலியாதிருந்தாய் அருணாசலா*

‘சௌரியங்காட்டினை’ - உனது வீரத்தைக் காட்டினாய் என்று பொருள்படும். ஆங்கிலத்தில் 'Force' (பராக்ரமம்) எனலாம். நீ உனது பராக்ரமத்தை காண்பித்தாய் என்கிறார். எதற்கு? ‘சழுக்கற்றதென்றே சலியாதிருந்தாய்’ - அவ்வாறு உனது வீரத்தை என்மேல் காட்டி, எனது அகந்தையை அழித்து, நீ சலியாது இருந்தாய் என்கிறார்.

உலகில் ஜன்மாவிற்கு ஆசைப்படுபவர்களுக்குதான் பாப, புண்யங்களுண்டு. இனி ஜன்மாவே, பிறப்பே வேண்டாம் என்று எண்ணுபவர்களுக்கு முமுக்ஷுக்கள் என்று பெயர். ஞானம் அடைவதற்கு ப்ரதானமாக ஒருவருக்கு இந்த முமுக்ஷுத்வம்தான் தேவை. அதாவது மோக்ஷத்துக்குப் போக வேண்டும் என்கிற ஆசை தீவிரமாக இருக்கவேண்டும். மோக்ஷம் போக வேண்டும் எனும் ஆசை யாருக்கு இல்லையோ, அவருக்கு மோக்ஷம் கிடைக்காது.

முதலில் ஶ்ரத்தை தேவை (விடாமுயற்சி). அதனால் விடாமல் தியானம் செய்து, ஆத்மவிசாரம் அப்யாஸம் செய்த வண்ணமாகவே இருக்கவேண்டும். ஶ்ரத்தையைக் காட்டிலும் ஊக்கம் குறையாமல் இருக்கவேண்டும். ஊக்கம் என்பது என்னவென்றால், இந்த ஸாதனையினால் அடையக்கூடிய நிலையை நினைத்து, நினைத்து பார்த்து ஆசையை வளர்த்துக்கொள்ள வேண்டும். பலனை நினைத்துப் பார்த்து ஊக்கம் குன்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக ஆத்மஸாக்ஷாத்காரம் அடைந்தால் துக்கமே இராதே என்று எண்ணி, எண்ணி ஸாதனையில் ஊக்கமுடன் ஈடுபட வேண்டும்.

இப்படி மறுபடி மறுபடி ப்ரும்ம ஸாக்ஷாத்காரம், மோக்ஷம் என்று பேசி உபன்யாசம் செய்வது எல்லாம் இந்த ஆசை வருவதற்காகவே. ஒரு பெரிய lecture கேட்டு அதனால் ஒரு சிறிதாவது பார்வை உண்முகப்பட வேண்டும் என்ற ஆசையும், ப்ரயத்தனமும் படவில்லையானால் அந்த உபன்யாசத்தினாலும்,

அதைக் கேட்டதினாலும் ஒரு ப்ரயோஜனமும் இருக்காது. ஆனால் ஒருவர் ஒரு மஹாத்மாவின் உபன்யாசத்தை கேட்டால், கேட்பவருக்கு ‘‘நமது நிலை இப்படி உள்ளதே! நாமும் சீக்கிரம் தியானம் செய்து முன்னேற வேண்டும்’’ என்று ஸாதனையில் ஈடுபடுவார். இதுவே உபன்யாசத்தின் பெரும்பலன். பல கதைகளையும், பல உபமானங்களையும் கொண்டு மஹான்கள் உபதேசிப்பது, இந்த ஊக்கத்தை உண்டாக்குவதற்குத்தான்.

புதிதாக ஒரு காரியம் செய்தால், அதிலுள்ள தீவிரமும், ஊக்கமும் போகப்போக குறைந்து போய்விடும். ஒரு வீடு வாங்குகிறோம். ஆரம்ப காலங்களில் சிரத்தையுடன் வீட்டை கூட்டி, அழுக்கு வாராது பார்த்துக்கொள்கிறோம். ஒரு வருடம், பத்து வருடம் கடந்து அந்த வீடு பழகி விட்டால் அலக்ஷியப்படுத்தி விடுகிறோம். ஒரு T.V. பெட்டி வாங்குகிறோம். தொடக்கத்தில் அதை ஜாக்கிரதையாக பாதுகாக்கிறோம். இரண்டு மாதம் கழித்து, அதையே தூக்கிப்போட்டு விடுகிறோம். இப்படி பல உதாரணங்களைச் சொல்லலாம். அது போல், எந்த ஒரு மந்த்ரோபதேசமோ, ஒரு ஸாதனையோ குருவிடம் கற்றுக்கொண்டு ஈடுபடும்பொழுது, முதலில் இருக்கும் ஊக்கம் நாளாக நாளாகக் குறைந்துபோய்விடும். அது குறையாமலிருக்க குருநாதரிடத்தில் இருந்து ஸதா ஶ்ரவணம் செய்தவண்ணமிருக்க வேண்டும். ஆக, ஶ்ரத்தையைக் காட்டிலும் ஊக்கம் முக்கியமானது.

உலகில் அனைவரும் பாப, புண்யங்கள் செய்கின்றனர். ஒருவர் பல புண்யம் செய்தார். சில பாபம் செய்தார். நூறு புண்யம், பத்து பாபம் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு ஜன்மா உண்டா என்றால் உண்டு. எத்தகைய ஜன்மா என்றால், நூறு புண்யத்தில், பத்து பாபம் கழித்து 90 புண்யம் அனுபவிக்க ஒரு ஜன்மா வாராது. பாபம், புண்யத்தினால் கழியாது. புண்யம், பாபத்தினால் கழியாது. புண்யத்திற்கு பலன் சுகமும், பாபத்திற்கு பலன் துக்கமும் ஏற்படும். ஆதலால், மேற்கண்டவர் அதிக சுகம் கொண்டதும், சிறிது துக்கம் கொண்டதுமான ஒரு பிறப்பு எடுப்பார். நிச்சயம் சுகமே கொண்ட ஒரு பிறப்பு வாராது. இப்படி பலரும்

பலவிதமான பிறப்புகளை தங்களது பாப, புண்யங்களின் பொருட்டே பெறுகின்றனர். இப்படி அனைவரின் வாழ்க்கையிலும் சுக, துக்கங்கள் கலந்து இருப்பதினாலேயே யாருக்கும் நிம்மதி இருப்பதில்லை. ஶாந்தியானது (நிம்மதி) பாபம் முழுவதும் ஒழிந்தால்தான் கிட்டும்.

தபஸினால் பாபம் போகும். எது தபஸ்? பாகவத ஸம்பிரதாயத்தில் சொல்லியபடி வாழ்பவருக்கு நவவித பக்தி தபஸ், யோகிக்கு ப்ராணனை அடக்குவது தபஸ், வேதாந்திக்கு ப்ரதிக்ஷணமும் ஆத்மஸ்தானத்தில் மனதை ஒடுக்குவது தபஸ், கர்மானுஷ்டானம் செய்பவருக்கு, யாக, யக்ஞங்கள் தபஸ். இதைவிட ப்ரஸித்தியாக சரீரத்தை வருத்தி தூங்காமலிருப்பது போன்ற சரீரத்திற்கு சிரமம் கொடுக்கும் காரியங்களும் தபஸ் எனப்படுகிறது. இந்த தபஸினால்தான் பாபம் போகும்.

ஒரு வண்டியில் ஒருவர் செல்கிறார். நடுவழியில் பஞ்சர் ஆகியது. தற்காலிகமாக, அதை நிவர்த்தி செய்து மேலும் ஓட்டிக் கொண்டு போகிறார். மறுபடி நின்றால் மறுபடி கஷ்டம் வரும். மேலும் வண்டி ஓடினாலும், அவருக்கு ஒரு பயம் இப்பொழுது இருந்தவாறே இருக்கும். எங்கே நடுவழியில் மறுபடி இந்த வண்டி 'மக்கர்' பண்ணுமோ என்று. அதுபோல் உலகில் துக்கம் வருகிறது. ஏதோ காரியம் செய்து, துக்க நிவ்ருத்தி அடைந்தாலும், பயம் போவதில்லை. சுகம் வந்தாலும், எப்பொழுது துக்கம் வருமோ என்று பயமிருக்கிறது. நிம்மதி போய்விடுகிறது. இந்த நிம்மதி கிடைக்க, பாபம் ஒழிய வேண்டும். பாபம் ஒழிய தபஸ் தேவை.

ஒருவருக்கு நோய் வந்தது. அவர் ஒரு மஹானிடம் சென்றார். அந்த மஹான் அவரை அனுக்ரஹித்து அந்த நோயை நீக்கிவிட்டார். மறுபடி அந்த நோய் அவரை அணுகாது. ஒரு Ticket பரிசோதகர் ரெயில் வண்டியில் சோதனை செய்துகொண்டிருந்தார். ஒருவர் மாட்டிக்கொண்டார். அவர் இவரின் பால்யஸ்நேகிதர். இப்பொழுது சிரமதசையில் இருப்பதால், Ticket வாங்காமல், ப்ரயாணம் செய்து

மாட்டிக் கொண்டுவிட்டார். பரிசோதகருக்கு கடமையை மீறக்கூடாது எனும் எண்ணம். தனது சிநேகிதரும் கஷ்டத்திலிருந்து நீங்க வேண்டும். ஒருவாறு முடிவு செய்து, அவர்மேல் ஒரு Penalty (அபராதம்) விதித்து, அந்த அபராதத் தொகையை தானாகவே கட்டியும்விட்டார்.

அதுபோல், மஹாத்மாக்கள் தங்களின் சொந்த தபஸ் மூலமாகவே, தங்களிடம் வந்த மக்களுக்கு அனுக்ரஹம் செய்கின்றனர். அவர்களின் தபோபலம், சக்தி வாய்ந்திருப்பதால் அவர்களிடம் செல்லும் மக்களின் பாபம் அழிந்து விடுகிறது. அதனால் மறுபடி அந்த துக்கமோ, நோயோ அவர்களை அண்டாது. ஆனால் இது ஞானிகளின் விஷயத்திலும், தபஸ்விகளின் விஷயத்திலும் மட்டுமே பொருந்தும். சித்த புருஷர்கள் செய்யும் அனுக்ரஹம் இத்தகைய பலம் வாய்ந்தது அல்ல. அவர்களின் அனுக்ரஹம் பாபத்தைப் போக்காது.

ஆக, மோக்ஷம் போக ஆசைப்படுபவனுக்கு பாப, புண்யங்கள் தேவை இல்லை. தபஸே தேவை. அதிலும், இந்த ஞானம் மட்டுமே 'ஸாத்யம்' எனப்படுகிறது. அதாவது, மீதி ஸாதனங்களின் உபாயத்தால் ஞானத்தை அடைவதாய் இருக்க, ஞானமோ மனதின் உற்பத்தி ஸ்தானத்தை பிடித்துக்கொண்டு செல்வதால், இது ஒரு நேரடியான 'தபஸ்' ஆகும்.

இந்த தபஸிற்கு எதுவும் தேவையில்லை, ஒன்றைத்தவிர. அது மோக்ஷம் போக வேண்டும் என்கிற ஆசை. உலக விஷயங்களை நோக்கி ஓடாதிருக்க விரக்தி தேவை. ஞானி ப்ரதிக்ஷணமும் ஆத்மஸ்தானத்திலேயே தனது மனதை அடக்கி வைப்பதால், அவன் மனது உலகை நோக்கி ஓடாது. அவனுக்கு விரக்தி ஸ்வபாவமாக இருக்கிறது. அது ஞானத்திற்கு அவசியமாகவும் இருக்கிறது.

(தொடரும்)


# மஹாபாரத கதைகள்

**— நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

காட்டு வழியில் சஞ்சரித்துக் கொண்டிருந்த தமயந்தி, நடுவழியில் தபஸ்விகள் கூடி இருக்கும் ஒரு ஆஸ்ரமத்தைக் கண்டாள். இந்திரன் தேவர்களோடு அப்படி ஒரு மாறுவேடத்தில் வந்திருந்தான். தமயந்தி அவர்களை நமஸ்கரித்து, தனது கதையை விஸ்தாரமாகச் சொல்லி, தனது கணவனின் இருப்பிடத்தையும், க்ஷேமத்தையும் விசாரித்தாள். அதைக்கேட்ட தபஸ்விகள், ''தமயந்தி! உன் கதையை நாங்கள் அறிவோம். விரைவில் நீ மறுபடி நளனுடன் சேர்ந்து வாழ்வாய். நாங்கள் திரிகாலமும் அறிந்தவர்கள். நீ வருந்தாதே'' என்று ஆசீர்வதித்து தங்களுடைய ஆஸ்ரமங்களுடன் மறைந்தனர்.

காட்டில் சீதையை பிரிந்த ராமன், ஜடாயுவைக் கண்டவுடன் சந்தோஷித்தாலும், அது உயிர்நீத்தவுடன் எப்படி மேலும் துக்கமடைந்தானோ, அதுபோல் ஆதரவற்ற தமயந்தி தவசிகளைக் கண்டு சிறிது ஆனந்தம் அடைந்தாலும், அவர்கள் மறைந்தவுடன் மீண்டும் துக்கம் அடைந்தாள். இப்படியே மேலும் நடந்து சென்றவள், ஒரு நதிக்கரையை அடைந்தாள். அங்கு ஒரு பெரும் வணிக ஜனக்கூட்டம் சென்றுகொண்டிருப்பதைக் கண்டாள். கேசங்கள் கலைந்து, சரியாக உடை உடுத்தாது, குளிக்காமலும் இருந்த தமயந்தியைக் கண்ட அந்த ஜனங்கள் பலவிதமாய் நடந்துகொண்டனர்.

சிலர் இவளைப் பரிகசித்தனர், பைத்தியம், பித்து பிடித்தவளென்று. சிலர் அவளுக்கு ஆதரவாக, அனுதாபமாக சில வார்த்தைகள் கூறினர். சிலர் யாதும் கூறாது இருந்தனர். சிலர் அவளை அக்கூட்டத்தின் தலைவனிடம் இட்டுச் சென்றனர். அவன் தமயந்தியை தகுந்த மரியாதையுடன் விசாரித்தான். தமயந்தியும் தனது விஷயத்தை முறைப்படி தெரிவித்தாள். அதைக்கேட்ட வணிகர் தலைவன், ''நான் நளன் என்ற மனிதனை எங்கும்



பார்க்கவில்லை. இருப்பினும் உன்னை வனதேவதைகள் ரக்ஷிக்கட்டும்'' என்றான். அந்தக் கூட்டம் எங்கு செல்கிறது என்று தமயந்தி விசாரிக்க, அவன் சேதி நாட்டிற்கு வியாபாரம் குறித்துச் செல்கிறது என்றான். தமயந்தியும் அவர்களுடன் பல நாட்கள் கூடவே சென்று, ஓரிரவு அவர்களுடன் ஒரு குளக்கரையில் தங்கினாள்.

தமயந்தியை விட்டுப் பிரிந்து சென்ற நளனோ காட்டின் நடுவில் ஒரு பெருந்தீயைப் பார்த்தான். அதனுள்ளிருந்து ஒரு குரல், ''நளனே! என் அருகில் வா. உனது வரவிற்காகவே நான் காத்திருக்கிறேன்'' என்று மீண்டும் மீண்டும் அழைத்தது. அருகில் சென்று எட்டிப்பார்த்த நளன், அந்த தீயினுள் ஒரு நாகராஜனைப் பார்த்தான். அது சுருண்டு படுத்திருந்தது. நளனைப் பார்த்தவுடன், அது பேச ஆரம்பித்தது.

''நளனே! என்பெயர் கார்க்கோடகன். ஒரு ப்ரும்மரிஷிக்கு நான் ஒரு அபராதம் செய்தபொழுது, என்னை அவர் ஒரு ஜடமாக இருக்க சபித்துவிட்டுச் சென்றார். இருப்பினும் கருணைகொண்டு, நளன் எனும் அரசன் இந்த சாபத்திலிருந்து உன்னை விடுவிப்பான். அதுவரை இவ்வாறே கிடப்பாய் என்று சொல்லிப் போனார். நீ

சீக்கிரம் என்னை தீயை விட்டு வெளியில் கொண்டு செல். உனக்கு மிகுந்த உபகாரத்தைச் செய்வேன் என்று சொல்லி, அது ஒரு கட்டைவிரலளவு சுருங்கியது.

நளன் அதை அப்படியே நம்பி, தனது கையில் அதை எடுத்து, தீ இல்லாத இடத்திற்கு எடுத்துச் சென்றான். நளன் கீழே வைக்க யத்தனித்த பொழுது, அந்த பாம்பு பேசியது. ''நளனே! என்னை கீழே வைக்காதே. ஒன்று, இரண்டு என்று அடிகளை எண்ணிக் கொண்டு நடந்து செல். உனக்கு ஒரு பரமக்ஷேமத்தைக் கொடுக்க நினைக்கிறேன். அதன் பின் உன்னைவிட்டு நானே விலகிவிடுவேன்' என்றது.

நளனும் அவ்வாறே செய்தான். பத்தாவது அடி 'தசம்' ஆகும். 'தச' என்றால் கடி என்றும் பொருள் உண்டு. பத்தாவது அடியில் நளன் 'தச' என்று சொன்னவுடன், அந்த பாம்பு, நளனை நன்றாகக் கடித்தது. உடன் நளனுக்கு உடல் விகாரமாகி, முகம் கறுத்துவிட்டது. ஆனால், அவன் மரணம் அடையவில்லை. நாகம் தனது சுயரூபத்தை அடைந்து, மேலும் பேசியது. ''நள! உனக்கு நான் கெடுதல் செய்யவில்லை. உன்னை வஞ்சித்த கலியை சிக்ஷிக்க எண்ணியே இவ்விதம் செய்தேன். உன்னுடலில் இருக்கும் கலியை என் விஷம் எரிக்கும். உன்னை ஒன்றும் செய்யாது. உனக்கு க்ஷேமம் ஏற்படும் வரை, உனது உரு ஒருவரும் அறியாதபடி இருக்குமாறே உனது உடலை பாதித்தேன். குற்றமற்றவனும், எனக்கு உபகாரம் செய்தவனுமான உன்னை வஞ்சித்த கலிக்கு இது அவசியம். மேலும் கேள். பிராணிகளிடம் இருந்தும், பல்லுள்ள பிராணிகளிடமிருந்தும் உனக்கு இனி பயம் வராது. எனது அருளால், உனக்கு உயர்ந்த அறிவும் உண்டாகும். நான் சொல்வதைச் செய். அயோத்தியை ஆண்டுவரும் ருதுபர்ணன் என்பவன் மிக்க நல்லவன். அவனை அண்டி, அவனிடம் பாகுகன் என்னும் பெயர் கொண்டு, அவனுடைய குதிரை லாயத்தில் பணிபுரி. அவனிடம் இருந்து சூதாடும் கலையை பெற்றுக்கொண்டு, குதிரை ஓட்டும் வித்தையை அவனுக்குக் கற்றுக்கொடு. அவன் உனக்கு சிறந்த நண்பனாவான்.

அதன் பின், விரைவில், மனைவி, மக்களோடு சேருவாய். சோகத்தில் மனதை செலுத்தாதே. எப்பொழுது நீ உனது உருவத்தை பார்க்க நினைத்தாலும், என்னை நினைத்துக்கொள். இந்த ஆடையை அணிந்து கொள். (கார்க்கோடன் நளனுக்கு ஒரு ஆடையையும் கொடுத்தான்). உனது சுயரூபம் உனக்கு புலப்படும்'' என்று கூறி மறைந்தது.

இந்திரலோகத்தில் ஊர்வசி அளித்த சாபம் அர்ஜுனனுக்கு வருத்தமளித்தாலும், அவனுக்கு அஜ்ஞாத வாசத்தில் எப்படி அது உபயோகப்பட்டதோ, அதுபோல் தமயந்தியை இழந்து தவிக்கும் நளன், மேலும் விகார ரூபத்தை அடைந்தாலும், தெய்வ அனுக்ரஹத்தால் நன்மையையே அடைந்தான். ஏனெனில், கலி அப்பொழுதிருந்துதான், தான் தவறு செய்தோம் என்று உணர ஆரம்பித்தான். நளன், ருதுபர்ணனுடைய பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டான்.

அதே ஸமயத்தில், தமயந்தி வணிகர்களுடன் ஓரிரவு ஒரு குளக்கரையில் தங்கியிருந்தபொழுது ஒரு காட்டு யானைக் கூட்டம் அருகாமையில் நீர் குடிக்க வந்தது. வணிகர் கூட்டத்திலும் சில யானைகள் இருந்தன. காட்டு யானைகள் ஊர் யானைகளுடன் சண்டையிட வந்தன. அவைகளில் மதம் பிடித்தவை இருந்ததால் மிகுந்த குழப்பம் உண்டானது. அந்த ஊர் யானைக் கூட்டம், காட்டு யானை கூட்டத்தைக் கண்டு பயந்து ஓட, காட்டு யானைகள், உறங்கிக்கொண்டிருந்தோரை த்வம்சம் செய்தன. தமயந்திக்கு அபாயம் ஒன்றும் ஏற்படவில்லை. அவள் பயந்து போனாள். பலர் இறந்து போயினர். பலர் பயந்து ஓடிப் போயினர்.

விடியற்காலையில் எஞ்சி இருந்தோரும், தமயந்தியும் இரவு நடந்த சம்பவத்தை நினைத்து துக்கித்தனர். தமயந்தியோ, ''துரதிர்ஷ்டம் என்னை இப்படித் தொடர்கிறதே. எனது பாவமானது அப்பாவிகளான இவர்களையும் அல்லவா சேர்த்து கஷ்டத்துக்கு உள்ளாக்குகிறது'' என்று புலம்பலானாள். அந்த வணிகக் கூட்டத்தில் நல்மனமும், இளகிய உள்ளம் படைத்த சிலரும், பிராமணரும்

அவளை சமாதானப்படுத்தி, மேற்கொண்டு அவர்கள் பயணத்தைத் தொடர்ந்து சேதி நாட்டை அடைந்தனர். யானைகள் தங்கள் கூட்டத்தாரை கொன்றபொழுது, சிலர் தமயந்தியினால்தான், இந்த துருதிருஷ்டம் தங்களை வந்தடைந்தது என்று நேரிடையாகவே சொல்லவும் செய்தனர். (கிருஷ்ணனை சியந்தகமணியைத் திருடினான் என்று சத்ராஜித் சொன்னது போலாயிற்று அது) தமயந்தி தனது போறாத காலமென்றெண்ணி, அமைதியாயிருந்தாள்.

சேதி நாட்டில் அந்தக் கூட்டம் பல இடங்களைக் கடந்து, அரண்மனைக்கு அருகேயும் சென்றது. திக்கற்றவளாய் தமயந்தியும் அவர்களுடனேயே திரிந்தாள். மிகுந்த நல்லவர்களுக்கே இத்தகைய துக்கம் வரும் போலும். அரசனின் தாய் உப்பரிகையில் நின்று கொண்டிருந்தாள். தமயந்தியைக் கண்டதும் அவள் மனதில் இனம் புரியாத ஈர்ப்பும், அனுதாபமும் உண்டாயிற்று. தமயந்தியை அருகில் வரவழைத்து அவளுடைய விவரங்களை முழுவதும் கேட்டாள். மிகுந்த பச்சாதாபப்பட்டு, தனது பெண் ஸீநந்தையுடன் அவளுக்கொரு தோழியாக இருக்குமாறு செய்தாள். தமயந்தி தன் கணவனைத் தேடுவதுதான் தனக்கு முதல் கடமை எனக்கூற, அந்த அரசனின் தாய் அதற்கு தானே முயற்சிப்பதாகக் கூறினாள்.

சிவபெருமான் தலையிலிருக்கும் சந்திரனும், கையிலிருக்கும் நெருப்பும் எப்படி அவரைக் குளிரவும், வாட்டவும் முடியவில்லையோ, அதுபோல் பல சங்கடங்களையும், பலவிதமான சம்பவங்களையும் சந்தித்திருந்த தமயந்திக்கு அந்த சம்பவம் பெரிதும் துக்கத்தையோ, மகிழ்ச்சியையோ கொடுக்கவில்லை.

வணிகர் கூட்டத்தில் தமயந்தி மட்டும் அரசகுடும்ப சம்பந்தம் பெற்றது ஆச்சரியம்தான். அது கூட தேவராஜனின் அனுக்ரஹம் போலும்.

(தொடரும்)

## ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவம்

ஸ்ரீவனம் என்றழைக்கப்படும் ப்ருந்தாவனத்தில் மார்ச் 18-ந் தேதி பாகவத மாஹாத்மியம் ஆரம்பித்து மார்ச் 19-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவம் ஸ்ரீரகுநாதாஶ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த மஹோத்ஸவத்தில் 130க்கு மேல் பாகவத பாராயணம் செய்யும் பாகவதர்களும் 500க்கு மேல் பக்தர்களும் கலந்துகொண்டனர்.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**ஏப்ரல் 6-ந் தேதி - பங்குனி உத்திரம்**

திருக்குடந்தை ஆராவமுதன் திருக்கல்யாண உத்ஸவம் நம் மிஷன் சார்பில் நடைபெறும்.

**ஏப்ரல் 14-ந் தேதி - தமிழ் வருடபிறப்பு**

சென்னை ப்ரேமிகபவனத்தில் பஞ்சாங்க படனம் நடைபெறும். ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெறும்.

**ஏப்ரல் 26-ந் தேதி - அக்ஷய த்ருதியை**

சென்னை ப்ரேமிகபவனத்தில் நாமஸங்கீர்த்தனம் நடைபெறும்.

**ஏப்ரல் 14-ந் தேதி, 15-ந் தேதி**

சென்னை, பம்மல் ராதே க்ருஷ்ண மண்டலி சார்பில் பம்மல், ஸ்ரீ கணபதி தெரு, நடைபெறும். ஸ்ரீ சீதா கல்யாண மஹோத்ஸவத்தில் (பாகவத ஸம்ப்ரதாயம்) ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

அன்று மாலை 5 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் ''ஸ்ரீ த்யாகப்ரம்ம சரித்ரம்'' பற்றி உபன்யாஸம் செய்ய இருக்கிறார்கள்.

**ஏப்ரல் 28-ந் தேதி - ஶங்கர ஜயந்தி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஶங்கர ஜயந்தி மஹோத்ஸவம் நடைபெறும்.

**மங்களானி பவந்து**